முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1669

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.04.2024,** புதன்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கா
   பிரணவ குடில்படைத்த தேசிகா
   சரவண சுடராகி உலகோர்க்கு சற்குருவாய்
   ஒளி தருகின்ற ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
   அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 11 ம் நாள், 24.04.2024, புதன்கிழமை)
   அறமாக அரங்கன் நீவளர்க்கின்ற
   அற்புதமான ஞானவழிகள் தானும்
3. வரமாக உலகெங்கும் பரவிஇனிதே
   வடிவேலன் என் அருள்பலத்தால்
   அருள்பலத்தால் உலகெல்லாம் அரங்கர் மயமாக
   ஆற்றல்பட ஞானஉலகாக மாற்றம்
4. பெருமைபட அரங்கன் தர்மத்தால் காணும்
   பிசகின்றி அரங்கனுக்கு தொண்டாற்றும்
   ஆற்றுகின்ற அன்பர்படைகள் அனைவருக்கும்
   ஆக்கம் தந்து ஆறுமுகன்யான்
5. மாற்றம்தனை உலகினில் நிகழ்த்துவேன்
   மாதர்மம் உலகமெங்கும் வளரவளர
   வளரவே அரங்கன் அவதார நோக்கசித்தி
   ஆற்றல்பட சித்தியாகி ஆங்காங்கே
6. அளவற்ற அரங்கன் ஆக்கம்தனை
   அன்பர்கள் வழி ஆக்கசக்தியாக
   அகிலத்தில் எங்கும் நிரப்பி
   அறிவிப்பேன் உலகெலாம் அரங்கர்மயம்
7. மயமாகும் அரங்கன் விருப்பப்படி
   மண்ணுலகம் தர்மலோகமாகி
   களங்கமற ஞானவான்கள் நிரம்ப
   கலியுகம் ஞானயுகமாக மாற்றம்பெறும்

8. வரம் தருகின்றேன் அரங்கனுக்கு
வல்லமை கூட்டி நித்தம்நித்தம் யானே
அறமாக அரங்கன் வெளிப்பட
அற்புதத்தை கலியில் யானே நடத்துகின்றேன்
9. நடத்தவே அரங்கன் வழி உலகம் நன்மை கருதி வரமாக
அறத்தை நிரப்பி இனிதே வையகத்தில் வள்ளல் தன்மை கொண்ட
ஞானஆட்சியையும் வருங்காலம் ஞானசித்தர் காலத்தையும்
பெருமைபட உலகம் அடைந்து பேருலகம் ஞானலோகமாகும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–